Nestlé Good food, Good life

# பத்திரிகை செய்தி

கொழும்பு, 28 செப்டெம்பர் 2022

## நெஸ்லே லங்கா சவால்மிக்க இக்காலகட்டத்தில் தனது கூட்டாளர்களுக்கு ஆதரவளித்து வருகிறது

115 ஆண்டுகளுக்கும் மேலாக இன்பத்திலும், துன்பத்திலும் தனது கூட்டாளர்களுக்கு உறுதுணையாகத் திகழ்ந்து வந்துள்ள ஒரு நிறுவனம் என்ற வகையில், நெஸ்லே லங்கா தனது மதிப்பு சங்கிலி கூட்டாளர்களுக்கு உணவு மற்றும் பான வகை தயாரிப்புகளை விநியோகிக்க நடவடிக்கை எடுத்தது. தற்போதைய பொருளாதார தளம்பல் நிலைமையில் அதனைச் சமாளிப்பதற்கு அவர்களுக்கு உதவுவதற்காக ஜூன் மாதம் ஆரம்பிக்கப்பட்ட இந்த நற்காரியம், ஊழியர்களின் தன்னார்வத் தொண்டுப்பணி மூலம் இலங்கைக்கு பிரதியுபகாரம் ஆற்றும் நிறுவனத்தின் தொடர்ச்சியான பயணத்தின் அங்கமாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் முதல் கட்டமானது, கொழும்பில் உள்ள நிறுவனத்தின் தலைமை அலுவலகம், குருநாகலிலுள்ள தொழிற்சாலை மற்றும் விநியோக மையம் ஆகியவற்றின் ஆதரவுச் சேவை ஊழியர்கள் மற்றும் அதன் கள விற்பனை அணியினர் மத்தியில் நிறுவனத்தின் மதிப்பு சங்கிலிக் கூட்டாளர்களின் 3,500 க்கும் மேற்பட்ட பணியாளர்களுக்கு ‘நெஸ்லே அக்கறை அன்பளிப்புப் பொதிகள்’ வடிவில் தொடர்ந்து மூன்று மாதங்களுக்குப் பயன்பெற ஏற்பாடு செய்யப்பட்டது. ஆகஸ்ட் மாதத்தில் அதன் முயற்சிகளை மேலும் முன்னெடுத்துச் செல்லும் வகையில், நிறுவனம் இதன் இரண்டாம் கட்டமாக பாலை மூலமாகக் கொண்ட மதிப்புச் சங்கிலியில் உள்ள அதன் 240 க்கும் மேற்பட்ட கூட்டாளர்களுக்கு உதவிகளை வழங்கியுள்ளது. இவ்வாறு விநியோகிக்கப்பட்ட ‘நெஸ்லே அக்கறை அன்பளிப்புப் பொதிகள்’, நாட்டில் தலைதூக்கும் உணவுப் பற்றாக்குறைக்கு தீர்வு காண உதவும் வகையில், இரும்புச் சத்து, விட்டமின் டி* செழுமை நிரம்பிய நெஸ்லே நெஸ்டமோல்ற்று மற்றும் இரும்புச் சத்தின்** செழுமை நிரம்பிய நெஸ்லே மெகி ரசமுசு போன்ற இலங்கையில் உணவில் குறைபாடாகவுள்ள நுண்ணூட்டச்சத்துக்களின் செழுமையுடன், நெஸ்லேயின் மிகவும் அபிமானம் பெற்ற தயாரிப்புகள் அடங்கலாக, மிகவும் சிந்தித்து, தயாரிக்கப்பட்டுள்ளன.

“இது சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில், இலங்கையில் நம் அனைவருக்கும் மிகவும் சவாலானதொரு காலகட்டமாகும். முன்னெப்போதையும் விட இப்போது நாம் ஒன்றாக இணைந்து பணியாற்றுவதும் ஒருவருக்கொருவர் உதவுவதும் மிக முக்கியமானது. எங்கள் மதிப்புச் சங்கிலி கூட்டாளர்களின் ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதில் நாங்கள் மிகுந்த கவனம் செலுத்துகிறோம். எனவே, இந்த நேரத்தில் அவர்களுக்கு மிகவும் தேவையான ஆதரவை வழங்க நாங்கள் தொடர் செயல்திட்டங்களை ஆரம்பித்தோம். எங்களின் வணிகச் செயல்பாடுகளின் தொடர்ச்சிக்கு அவர்களின் மீள்எழுச்சி மற்றும் விலைமதிப்பற்ற பங்களிப்பிற்காக நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். இலங்கைக்கு பிரதியுபகாரம் ஆற்றும் முயற்சியில், எங்கள் ஊழியர்கள் தங்கள் நேரத்தைத் தன்னார்வத்துடன் முன்வந்து, ஒற்றுமையுடன் ஒன்று திரண்டிருப்பதைக் கண்டு நான் பெருமைப்படுகிறேன். இது வெறும் ஆரம்பம் மாத்திரமே. எதிர்வரும் மாதங்களில் எமது மதிப்புச் சங்கிலியைத் தாண்டி, சமூகங்களுக்கு எமது ஆதரவை வழங்க ஆவலுடன் உள்ளோம்,” என்று நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான திரு. ஜேசன் அவன்சென்யா அவர்கள் கருத்து தெரிவித்தார்.

‘தற்போதைய மற்றும் எதிர்கால தலைமுறைகள் என அனைவரதும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு உணவின் ஆற்றலை வெளிக்கொண்டு வருதல்’ என்ற அதன் நோக்கத்தால் உந்தப்பட்டு, நெஸ்லே நிறுவனம் இலங்கை வாழ் குடும்பங்களை தலைமுறை தலைமுறையாக உயர்தர உணவு மற்றும் பான வகைகள் மூலம் ஊட்டமளித்துள்ளது. 1906 ஆம் ஆண்டு இலங்கையில் தனது செயற்பாடுகளை ஆரம்பித்து, இன்று, நெஸ்லே இலங்கை மக்களின் வாழ்க்கையின் ஒரு அங்கமாக மாறியுள்ளது. 25,000 க்கும் மேற்பட்ட இலங்கை பால் உற்பத்தி மற்றும் தென்னை விவசாயிகள் மற்றும் வீடுகளில் தென்னை வளர்ப்பவர்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்திற்கு பங்களித்து வருவதுடன், 800 க்கும் மேற்பட்டவர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பினை வழங்கியுள்ளது. கடுமையான பாதுகாப்பு மற்றும் தரக் கட்டுப்பாடுகளைப் பயன்படுத்தி, குருநாகலிலுள்ள தனது அதிநவீன தொழிற்சாலையில், இலங்கையில் விற்பனை செய்யப்படும் 90% க்கும் அதிகமான தயாரிப்புகளை உற்பத்தி செய்கிறது.

*100 கிராம் நெஸ்டமோல்ற்றில் 17 மில்லி கிராம் இருப்புச்சத்து மற்றும் 6 மைக்ரோ கிராம் விட்டமின் டி அடங்கியுள்ளன.

**தினசரி இரு பக்கெட்டுக்களை உள்ளெடுப்பது 3 பேருக்கு போதுமான அளவில் பரிந்துரைக்கப்பட்ட தினசரி சராசரி தேவையின் இரும்புச்சத்தின் 1/3 பங்கினை வழங்குகிறது. 100 கிராம் மெகி ரசமுசுவில் 190 மில்லி கிராம் இரும்புச்சத்து அடங்கியுள்ளது.

---

**தொடர்பகளுக்கு:**

நிறுவன பொது விவகாரங்கள் தமித குலதுங்க +94777915949 Damitha.Kulatunga@lk.nestle.com

---

நிறுவன தொடர்பாடல்கள் இசுரி அழகக்கோன் +94760395781 Isuri.Alahakoon@lk.nestle.com

**புகைப்படத்தில் இடம்பெற்றுள்ள காட்சி:**

புகைப்படம் 1: நெஸ்லே லங்காவின் மதிப்புச் சங்கிலி கூட்டாளர்களின் 3,500 க்கும் மேற்பட்ட பணியாளர்களுக்கு பயனளித்துள்ளது

புகைப்படம் 2: நெஸ்லே லங்காவின் எமது பால் சார்ந்த மதிப்புச் சங்கிலியிலுள்ள 240 க்கும் மேற்பட்டோருக்கு பயனளித்துள்ளது